# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## இலங்கை புகையிரத சேவை

## ஐந்து (05) எண்ணிக்கையான டீசல் பல்வகை அலகுகளை (DIESEL MULTIPLE UNITS) வழங்குவதற்கான பெறுகை

**SRS/F.8156**

1. இலங்கை புகையிரத சேவைக்கு ஐந்து (05) எண்ணிக்கையான டீசல் பல்வகை அலகுகளை (DIESEL MULTIPLE UNITS) வழங்குவதற்காக சர்வதேச உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து முத்தரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு புகையிரத சேவையின் சார்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் உயர் மட்ட பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக்கொள்வார்.

2. விலைக்கோரல்கள் சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் மேற்கொள்ளப்படும். 2016 டிசம்பரில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வெளியிடப்பட்ட பொருட்களின் பெறுகைக்கான நிலையான விலைக்கோரல் ஆவணங்களின் அடிப்படை மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் பெறுகைக்கான விலைக்கோரல் ஆவணங்கள். 2024 பெறுகை வழிகாட்டியின் 05ஆம் பந்தி பிரிவு 5.3, உப பிரிவு C பிரகாரம் விலைமனு ஆவணம் பயன்படுத்தப்படுகின்றது.

3. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் 2026-06-08ஆம் திகதி முதல் 2026-07-20ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை பின்வரும் முகவரியில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
   புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
   ஓல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.

   | | | |
   |---|---|---|
   | தொலைபேசி | : | 94 (11) 2438078 அல்லது 94 (11) 4600202 |
   | தொலைநகல் | : | 94 (11) 2432044 |
   | மின்னஞ்சல் | : | srs.slr@gmail.com, tender1.srs@gmail.com |
   | இணையதளம் | : | www.railway.gov.lk |

4. 2026-06-08ஆம் திகதி முதல் 2026-07-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் அல்லது இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களில் 2026-07-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி (இலங்கை நேரம்) வரையில் இலங்கை ரூபாவில் 500,000.00 மட்டும் அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் மேற்கூறிய முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

5. விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணத்தின் 3.2.2 பிரிவின் பிரகாரம் – ஒப்பந்தம் சார்ந்த மற்றும் தொழில்நுட்ப அனுபவம் என்பதில் கொடுக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், தனது திறன் மற்றும் தகுதியை நிரூபிக்கும் ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

6. விலைமனுக்கள் 2027-01-12ஆம் திகதி வரை செல்லுபடியாகும். (விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 175 நாட்கள்)

7. விலைமனுதாரர்கள் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் ஒரு வங்கியினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உள்நாட்டு வங்கி அல்லது சர்வதேச அளவில் கீர்த்தி வாய்ந்த வங்கி முகப்பிலிருந்து பெறப்பட்ட வங்கி உத்தரவாத வடிவில் 660,000 USD தொகை அல்லது அதற்குச் சமமான இலங்கை ரூபாவை விலைக்கோரல் பிணை முறியாக வழங்க வேண்டும்.

8. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2026-06-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை, பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் II, 7ஆம் மாடி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் இடம்பெறும்.

9 விலைமனுக்களை 2026-07-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் முடிவுறுத்தல் நேரத்தின் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**உயர் மட்ட பெறுகைக் குழு,**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,**
**நிலை 07, செத்சிறிபாய கட்டம் II,**
**பத்தரமுல்ல, இலங்கை.**

**தலைவர்,**
**உயர் மட்ட பெறுகைக் குழு.**